முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 19.08.2025

O.S. 70/2022

வா.சா. 1 – பெலிக்ஸ் மோகன்

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் வள்ளியூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிகிறேனா என்றால் இல்லை. நான் இளங்கலை சட்டம் பயின்றுள்ளேன். நான் பார்கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்துள்ளேன். அதனால் நான் வழக்கறிஞர் என்றால் சரி.

2) இந்த வழக்கு சொத்துகளும் அதற்கு அதிகமான சொத்துக்களும் எனது அப்பா எப்.எம் . ஆன்டனிக்கு பாத்தியம் என்றால் சரி. எனது அப்பாவிற்கு மொத்தம் 7 குழந்தைகள். பிரேமலதா, பிரான்சிஸ் துரை, அடுத்து நான், மேரிபோல்ஸ், ெஹலன் சாந்தி, ஜெயந்தி, ஜான் கென்னடி, ஆவார்கள். பிரான்ஸ்சிஸ் துரை நான், ஜாண்கென்னடி ஆகியோர் ஆண் மக்கம் என்றாலும் பிறர் பெண் மக்கள் என்றாலும் சரி.

3) மேரி போல்ஸ்க்கு மொபுலுஸ் என்ற பெயர் உண்டு என்றால் இல்லை. பிரான்சிஸ்துரை 21.09.2018 ல் இறந்தார். அவருடைய வாரிசுகள் மனைவி ராஜம் துரையும் 1,2 பிரதிவாதிகளும் மற்றும் அஸ்வின் ஆன்றோ என்றால் சரி. எனது அப்பா 27.05.2021 ல் எந்த சொத்துதிற்கும் உயில் எழுதாமல் இறந்துவிட்டார் என்றால் கன்னியாகுமரியில் உள்ள சொத்திற்கு எழுதவில்லை ஆனால் திருநெல்வேலி மாவட்ட சொத்துகளுக்கு எழுதியுள்ளார்.

4) எனது அப்பா காலமானபோது எனது அம்மாவும் 7 பிள்ளைகளும் வாரிசுகள் என்றாலும் பிரான்சிஸ் துரை இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளும் எனது அப்பாவின் வாரிசுகள் ஆவார்கள் என்றால் சரி. எனது அப்பா இறந்தபின்பு அவரது சொத்துகள் அனைத்தும் மேற்படி அனைத்து வாரிசுகளுக்கும் செல்லும் என்றால் சரி. அவரது பெயரில் உள்ள சொத்துகள் செல்லும்.

5) 12.04.2022 ல் முதன்முதலாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. இந்த வழக்கு சொத்திற்கு செட்டில்மென்று ஆவண எண் 3463/2018 என்ற ஆவணத்தில் படி உரிமை கோருகிறேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண் 32/2022 என்ற வழக்கை எனக்கு எதிராகவும் மற்ற வாரிசுகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்தார். அது நிலுவையில் உள்ளது. அந்த வழக்கை முதலில் நாகர்கோவில் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது.

6) இரண்டாவதாக அந்த வழக்கை மகளிர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கை மீண்டும் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கில் நான் 7 ம் பிரதிவாதி. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வழக்கின் பிராதின் உண்மை நகல் என்றால் சரி. அது **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

7) 14.03.2022 தேதி மேற்படி வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆனேன் என்றால் சரி. அந்த வழக்கில் நான் கேட்கிற செட்டில்மென்று ஆவண எண் 3463/2018 ஐ இல்லாநிலையது என்று விளம்புகை கோரி முதல்பரிகாரம் கேட்கப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கில் நான் ஆஜராகி அந்த வழக்கின் ஆவணங்களை நகல் பெற்றுக்கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. மேற்படி வழக்கின் விபரங்களை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) சாட்சியிடம் பிராதை காண்பித்து கேட்டபோது பார்வை தெரியவில்லை என்று முதலில் கூறினார். பின்பு உங்களுக்கு என்ன விபரம் வேண்டும் என்று கேட்டு அவராகவே கேட்டு பிராதை படித்து பார்த்துவிட்டு பிராதில் முந்தைய வழக்கின் விபரத்தை சொல்லவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கில் நான் கோரிய பரிகாரம் அனைத்தும் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் முந்தைய வழக்கில் கோரவேண்டும் என்றாலும்,

தனியாக தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

9) முந்தைய வழக்கின் பிராதில் வழக்கு பட்டிகை சொத்தானது பிரான்ஸ் துரைராஜ் வாரிகளின் அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி அந்த விபரம் தவறானது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் புகைப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அந்த சொத்தில் கொட்டகை ஒன்று உள்ளது என்றால் சரி. அது சமீபத்தில் போடப்பட்டது.

10) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள கொட்டகை வழக்கு சொத்தில் உள்ளது என்றால் சரி. அதில் 1ம் பிரதிவாதி கடல் பாசியில் இருந்து சில உணவு பொருள்களை தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றால் தவறு. அவ்வாறானால் அதில் 1ம் பிரதிவாதி என்ன செய்கிறார் என்றால் தெரியாது அவர் தொழில் எதுவும் அந்த கொட்டகையில் செய்யவில்லை . அவர் ஆக்கரமிப்பு மட்டும் செய்துள்ளார்.

11) பிரதிவாதி வழக்கு சொத்தில் என்னுடைய அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று மட்டுமே பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரி. மேற்படி சொத்தில் நான் எவ்வாறு அனுபவித்து வருகிறேன் என்றால் தற்போது வரை அதில் தேங்காய் வெட்டி நான் அனுபவம் செய்கிறேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு நான் ஆட்சேபனை இல்லை என்று நான் எடுத்துரைத்துள்ளேன் என்றால் சரி.

12) எனது அப்பா காலமானபோது வயது 99 இருக்கும். அவரது பிறந்த தேதி எனக்க ஞாபகம் இல்லை. அவர் பதிவு துறையில் தலைமைஎழுத்தராக இருந்தார். எனவே அவரது பிறந்த தேதிக்கு ஆவணத்தை சமர்பிக்க இயலும் என்றால் முடியும். எனது அப்பா விருப்ப ஓய்வு பெற்ற அரசியலில் இருந்து பஞ்சாய்த்து தலைவர் போன்ற பதவிகளில் இருந்தார் என்றால் சரி. மேற்படி தொழிலும் செய்தார். எனது அப்பா 2018 லிருந்து வீட்டில் இருந்து வெளியில் செல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. 2018 ன் தொடக்கத்திலிருந்தே எனது அப்பா

மனநலம் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே இருந்தார் என்றால் சரியல்ல.

13) எனது அப்பாஜான் கென்னடி மற்றும் எனது கட்டுப்பாட்டில் இருந்தாரா என்றால் எனது கட்டுப்பாட்டில் இல்லை எங்களோடு சேர்ந்து குடியிருந்தார். மனநலம் பாதிக்கப்பட்ட எனது தந்தையை பயன்படுத்தி நானும் ஜான்கென்னடியும் சேர்ந்து செற்றில்மென்று ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் தவறு. அசல் வழக்கு எண் 32/2022 ல் இரண்டாவது பரிகாரமாக ஜான்கென்னடிக்கு எழுதிவைத்த செற்றில் மென்று ஆவணத்தை இல்லாநிலையது என்ற விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரி.

14) வழக்கு பட்டிகை சொத்தில் 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள கொட்டகை மாற்ற நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் இல்லை. அந்த கொட்டகை சுமார் 4 மாதத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டதாகும். அதனை நீக்கம் செய்ய நான் காவல்நிலையத்தில் மனு கொடுத்துள்ளேன் அவர்கள் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

15) இந்த வழக்கில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வழக்கறிஞரிடம் அதனை குறித்து சொல்லியுள்ளேன். அசல் வழக்கு எண் 32/2022 எனது அப்பா உயிரோடு இருக்கும் போது எனக்கு எதிராகவும் எனது அப்பாவுக்கு எதிராகவும்க 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண் 22/2021 தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எனது அப்பா உயிரோடு இருந்தார் என்றால் எனது அப்பா may மாதம் இறந்தார்.

16) அசல் வழக்கு எண். 22/21 ல் எனது அப்பாவிற்கு மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால் நீதிமன்ற காப்பாளர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது அப்பா 4 ம் பிரதிவாதி நான் 5 ம் பிரதிவாதி, ஜான் கென்னடி 6 ம் பிரதிவாதி என்றால் எனக்கு தெரியாது.

17) நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்று வழக்கறிஞர் மூலம் அந்த வழக்கில் நானும் ஜாண்கென்னடியும் ஆஜர் ஆனோம் என்றால் தவறு. அந்த வழக்கில் நான் அழைப்பாணையை வாங்கிக்கொண்டு எனது அப்பா நல்ல மனநிலையோடு இருக்கிறார் என்று அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேனா என்றால் எனக்கு தெரியாது.

18) அசல் வழக்கு எண் 22/21 திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண் 85/23 என்ற எண்ணில் விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரி. நான் 22/21 வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்திவிட்டு தற்போது இந்த வழக்கிற்காக அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19) அசல் வழக்கு எண் 22/21 ல் மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து எனக்கு வந்த அழைப்பாணையை 2021 பிப்ரவரி மாதம் 2 வது வாரத்தில் வாங்கினேன் என்றால் சரி. பிப்ரவரி 2 வது வாரத்திலேயே அசல் வழக்கு எண் 22/21 ன் விபரங்களை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரி. அந்த வழக்கில் எனது அப்பா மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அவரை ஏமாற்றி ஆவணங்கள் எழுதப்பட்டது என்பது வழக்கின் சாராம்சம் என்றால் சரி.

20) எனது அப்பா நல்ல மனநிலையில் இருக்கிறார் என்பதை நீதிபதியிடம் காண்பிக்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா நீதிமன்றத்தில் ஆஜர் ஆனால் அவரின் உண்மை மனநிலைதெரிந்து விடும் என்பதற்காக அவரை எனது கட்டுப்பாட்டில் வைத்து நான் பார்வையாளராக இருந்துகொண்டு அவர் இறந்தபின்பு நான் பல வழக்குகளை தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து யாருக்கு உரிமை என்பதில் பிரச்சனை உள்ளது என்பதில் பிரச்சனை உள்ளது என்றால் இல்லை. அது என்னுடைய சொத்து .

21) சொத்தில் உரிமை மூலத்தில் பிரச்சனை இருப்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

வழக்குசொத்தில் நான் சொல்லும் தென்னைமரங்கள் எனது அப்பாகாலத்தில் உள்ள மரம் என்றால் சரி. நான் வழக்கு சொத்தில் தென்னம்பிள்ளை எதுவும் வைக்கவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சார்பதிவாளர் காய்பலன் அல்லாத கொண்டை முறிந்த தென்னை மரங்கள் இருப்பதாக எழுதியுள்ளார் என்றால் சரி. அது வழக்கு சொத்தில் உள்ள தென்னை மரங்கள் அல்ல.

22) வழக்கு சொத்து என்பது வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது லக்க சொத்து என்றால் சரி. சொத்து மதிப்பீட்டில் 1வது லக்க சொத்தில் மரங்கள் இருப்பதாக எந்த மதிப்பீடும் செய்யவில்லை என்றால் சரி. வழக்கு சொத்தில் பலன் தரும் எந்த மரங்களும் இல்லை என்றால் சரியல்ல. ஆகவே இல்லாத மரங்களில் தேங்காய் வெட்டுவதாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

23) பிராதுடன் நான் காவல் நிலையத்தில்அளித்த புகார் ஒன்றினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த புகாரில் எனது சொத்தை பாதுகாக்க முள்வேலி போடமுடியாமல் உள்ளேன் என்றும் அனுபவம் செய்வதற்கு இடையூறு இருப்பதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேலும் அந்த புகாரில் 18.3.2022 ம் தேதி பிரதிவாதிகள் 250 தேங்காய்களை வெட்டி எடுத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. உண்மையில் நான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. காய்மரம் வழக்கு சொத்தில் இல்லாத நிலையில் 250 தேங்காய்களை வெட்டியெடுத்ததாக புகாரில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

24) வழக்கு சொத்து மற்ற சொத்துகளுடன் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். தம்பி சொத்தும் எனது சொத்தும் சேர்ந்து உள்ளது. தனியாக காம்பவுண்ட் இல்லை என்றால் சரிதான். வேலி இல்லை என்றால் சரி. பிராதில் விளக்கி உள்ள சொத்து போல் தலத்தில் இல்லை என்றால் சரியல்ல.

25) வழக்கு சொத்தின் புல எண்ணிலேயே உள்ள 1,2 பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட சொத்தை செல்லத்துரை மற்றும் 1 நபருக்கு பிரதிவாதிகள் விற்றுவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிரதிவாதிகள் செல்லத்துரைக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் ஆனது ஆவண எண் 4449/2023 ன் படி ரத்து செய்யப்பட்டு மீண்டும் பிரதிவாதிக்கே வரப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

26) வழக்கு சொத்தின் சர்வே எண்ணில் உள்ள கிணறு, கமலத்தடம், பாதை, கால்வாய், ஆகியவற்றில் பிரதிவாதிகளுக்கும் அவர்களுடைய அம்மா மற்றும் சகோதரருக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. அவர்கள் அவர்கள் உரிமையை விடுதலை செய்து ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

27) வா.சா.ஆ.5 ஆவணம் தற்போது ரத்து செய்யப்பட்டது என்றால் தெரியாது. சட்டப்படி ரத்து செய்யமுடியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்தம் 19 தாள்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் 7 ம் பக்கத்திலிருந்து 17 ம் பக்கம் வரை இல்லை என்றாலும் வழக்கிற்காக அதனை வேண்டும் என்றே எடுத்துவிட்டு வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விடுப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. முழுமையான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ. 1 ஆவணம் முழுமையான ஆவணமாக இல்லாததால் அதன் அடிப்படையில் நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

28) வள்ளியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 82/2022 வழக்கை இதே பிரதிவாதிகளுக்கு எதிராக நடத்திவருகிறேன் என்றால் சரி. தக்கலைகூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 163/21 என்ற வழக்கை 2 ம் பிரதிவாதி என்மீது தாக்கல் செய்து நடத்திவருகிறார் என்றால் சரி. அனைத்து வழக்கு பிரச்சனைகளும் எனது அப்பா அம்மாவிற்கு உரிமைப்பட்ட சொத்திற்கு அவர்கள் காலத்திற்கு பிறகு யாருக்கு உரிமைப்பட்டது என்பதுதான் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் பாகம் பிரித்து

வைத்துக்கொண்டோம்.

29) வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 1ம் லக்க சொத்தின் விஸ்தீரணம் ஒயிட்நர் போட்டு அழிக்கப்பட்டது என்றால் சரி. நான் செய்யவில்லை. அந்த பக்கத்தில் திருத்தம் இல்லை என்றும் திருத்தம் இருப்பதாக குறிப்பு இல்லமலலும் உள்ளது என்றால் சரி. பிரதிவாதி கொட்டகை அமைத்த பின்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியதற்கு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உண்மையில் நான் போலிசீல் புகார் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கு சொத்து சம்பந்தமாக முந்தைய வழக்குகளுக்கு முன்பு இருந்தே பிரதிவாதிகளும் அவரது அம்மாவும் அவரது சகோதரர்களும் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பிரதிவாதிகளின் அம்மாவும் சகோதரர்களும் அவசிய கட்சி என்றாலும் அவர்களை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எனது அப்பாவோடு யார் சென்றது என்றால் ராஜகோபால் என்ற நபர் சென்றார். நான் செல்லவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையில் எனது அப்பா எழுதினாரா மேலும் அதன் விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரி. எனது அப்பா என்னிடம் அதை சொன்னார். முழுக்க பொய்யான விபரங்களை சொல்லி தாக்கல் செய்த வழக்கு என்பதால் இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.